(2) தகவல் கோரல்—தொடர்ச்சி.

(ஆ) அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவர்களது வேலை நிறுத்தம் குறித்து.

திரு. துரை கலியமூர்த்தி : பாயின்ட் ஆப் ஆர்டர், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் சட்டத்துறை மாணவர்கள் தொடர்ந்து வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். இதிலே ஈடுபட்ட மாணவர்களுக்கு அளிக்கப்பட்டு வந்த சலுகை 92. . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் 41, 42—வது விதிகளின் கீழ் ஏதாவது கொடுத்திருக்கிறீர்களா ? அப்படிக் கொடுத்திருந்தால், நாளை எடுத்துக் கொள்ளப் போகிறோம், அப்படி வரும்போது கேளுங்கள், இப்போது உட்காருங்கள்.

திரு. துரை முருகன் : பாயின்ட் ஆப் ஆர்டர், தாங்கள் 42 லிருந்து 41க்குப் போகிறீர்கள். ஆகவே, இந்த 42—ஐப் பொறுத்தவரையில், சென்னை சட்டக் கல்லூரி மாணவர்கள் 70 பேர்கள் கைது செய்யப்பட்டது பற்றி, நேற்று இந்த அவையிலே எழுப்பப்பட்டது. . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அப்படி இந்த 42—ஐ எடுத்துக் கொண்ட பிறகுதான் அந்த மேட்டரைக் கேட்க வேண்டும்.

திரு. துரை முருகன் : இதுபற்றி நேற்று நம்முடைய மின்சாரத்துறை அமைச்சர் அவர்கள் எங்களுக்கு விவரம் தர வில்லை, 'கேதர்' பண்ணிச் சொல்வதாகச் சொன்னார்கள். அவர் ஒரு ஸ்டேட்மெண்ட் வைத்திருக்கலாம். அப்போது டிஸ்கஸ் பண்ணத் தேவையில்லை. அவர்கள் எப்படிக் கைது செய்யப் பட்டார்கள் என்ற சமாசாரம் தெரியவில்லை. அப்படிச் சொல் லாததால், நகரிலே எங்கும் ரொம்ப பதட்ட நிலை.

(இ) உணவுப் பொருள் வழங்கு துறை ஊழியர்கள் கைது குறித்து.

திரு. க. சுப்பு : நேற்றைய தினம் உணவுப் பொருள் வழங்கு துறையில் இருக்கும் ஊழியர்கள் கைது செய்யப்பட்டிருப்பதுபற்றி ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். இன்று அது வரவில்லை. அதே போல் பொள்ளாச்சியில் குவாலிடி மில்லில் பலர் கைது செய்யப்பட்டு போலீசார் மில்லை ஆக்கிரமிப்புச் செய்திருக்கிறார்கள். அதனால் பதட்டமான நிலை ஏற்பட் டிருக்கிறது. அந்த அமைச்சர் அவர்கள் 'எவர் ரெடி மினிஸ்டர்' இதை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன் : வழக்கறிஞர்கள் பிரச்சினை முதலமைச்சர் பம்பாயிலிருந்து வந்த பிறகு முடிவு செய்யப்படும் என்று சொன்னார்கள். அதைப் பற்றி ஒன்றும் தெரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இப்படி ஒவ்வொருவரும் பிரச்சினைகளை எடுத்துப் பேசிக் கொண்டிருந்தால் எப்படி ? கவன ஈர்ப்புத் தீர்மானங்களை முடித்து விட்ட பிறகு பாயின்ட் ஆப் ஆர்டர் கேளுங்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ் : பாயின்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் ஊழியர்கள் சம்பந்தமாக 42-வது விதியின் கீழ் ஒத்திவைப்புத் தீர்மானம் வந்தால் பதில் கூற அறிக்கை தயாராக இருப்பதாகக் கூறுகிறார்கள். ஆகவே, அந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: பேரவைத்துணைத் தலைவர் அவர்களே, நுகர் பொருள் வாணிபக் கழக ஊழியர்கள் 16 ம் தேதி முதல் சில கோரிக்கைகளை முன் வைத்து உண்ணாவிரதம் இருப்பது பற்றி ஒத்தி வைப்புத் தீர்மானம் ஒன்றினை எதிர்க்கட்சியில் இருக்கும் சில உறுப்பினர்கள் கொடுத்திருப்பதாகத் தெரிகிறது. இன்றைய தினம் அதை எடுத்துக் கொள்வதாக இருந்தால் இன்றையதினம் நான் அதற்கான புள்ளி விவரங்களோடு வந்திருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதை எடுத்துக் கொள்வதாக இருந்தால் எனக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை.

4. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்—தொடர்ச்சி

(இ) நுகர்பொருள் வாணிபக் கழக ஊழியர்களது உண்ணாவிரதப் போராட்டம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 1979 ம் ஆண்டு மார்ச் திங்கள் 16 ம் நாளன்று சென்னை சிவில் சப்ளை கார்ப்பரேஷன் ஊழியர்கள் தங்களின் கோரிக்கைகளை வலியுறுத்தி உண்ணாவிரதம் இருப்பதினாலும் மேலும் கீழ்ப்பாக்கத்திலுள்ள அலுவலகத்தில் மறியல் செய்த 18 ஊழியர்கள் கைது செய்யப்பட்ட சம்பவம் குறித்து ஏற்பட்டுள்ள பதட்டமான நிலை குறித்து விவாதிக்கப்பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டு திருவாளர்கள் ஏ. ஆர். மாரிமுத்து, சோ. அழகர்சாமி, ஓ. எஸ். வேலுச்சாமி, பொ. விஜயராகவன், மு. அம்பிகாபதி, செ. இராமலிங்கம், கூ. ச. முருகேசன், ஏ. செல்லப்பா, வி. கே. கோதண்டராமன், சி. கோவிந்தராசன், க. சுப்பு,